[2001 ஜனவரி 23

சொல்கிறபோது, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் நினைப்பது போல பதில் சொல்வது என்பது இயலாத ஒரு காரியம். இரண்டாவது, அமைச்சரவை சார்பாக ஒரு அமைச்சர் எழுந்து சொன்னால், அது எல்லா அமைச்சர்கள் சார்பாகவும்தான். ஆகவே, ஆற்காடு வீராசாமி அவர்கள், நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதில், இந்த அமைச்சரவை சார்பானது என்பதால், அந்தத் துறை அமைச்சர் சொல்லவில்லையே என்று கேட்பதிலே அர்த்தம் இல்லை.

முற்பகல் 10-50

திரு. ச. அழகிரி: இந்த நிகழ்வைப் பொறுத்தவரையிலும் திடீரென்று உறுப்பினர் கொண்டு வந்து காட்டவில்லை. இது நீண்டகாலமாக இருக்கிறது. ஏன் நான் இதில் உறுதியாக நிற்கிறேன் என்றால் இது எப்படி நடந்திருக்கும் என்பது சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் தெரியும். இதில் பல பிரச்சினைகள் நடந்திருக்கின்றன. பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு மாதிரி குற்றச்சாட்டு சொல்வது மாதிரி இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் சொல்வது என்னவென்றால் எது நியாயம், அநியாயம் என்பது பேரவைத் தலைவருக்குத் தெரியும். ஆகையினால் நான் அமைச்சரிடம் சொன்னேன். பொறுப்புள்ள ஓர் உறுப்பினர், அரசியல் ஆதாயம் தேடாதவர், இதைக் கொண்டு வந்து காண்பிக்கிறார்; இதிலே உண்மை இருக்கிறது, நடவடிக்கை எடுங்கள் என்று நான் அவரிடம் சொன்னேன். அதிலே உறுதியாக நடவடிக்கை எடுப்பதாக நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார். இதோடு போதும். (குறுக்கீடு) மணி 10-51 ஆகிறது. நடவடிக்கை எடுக்கப்படும், நீங்கள் உட்காருங்கள்.

வினா எண் 38, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

38—

தொழிற்பேட்டை

***31035—திரு. இரா பெர்னார்டு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2001 ஜனவரி 23]

(அ) குளச்சல் தொகுதியில் முட்டத்திற்கும், அம்மாண்டிவிளைக்கும் இடைப்பட்ட சிவந்தமண் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் தொடங்கப்படும்?

மாண்புமிகு இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது. (குறுக்கீடுகள்)

திரு. வி.கே. லட்சுமணன்: நான் controversial-ஆக எதுவும் சொல்லப் போவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எப்பொழுதுமே controversial-ஆகச் சொல்ல மாட்டீர்கள். மணி 10-50 ஆகிவிட்டது. நேரம் அதிகமாகிவிட்டது. அடுத்த கேள்விக்குக் கூப்பிட்டாகிவிட்டது. திரு. இரா. பெர்னார்டு.

திரு. இரா. பெர்னார்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைக்க... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்களுக்கு ஓர் உறுதியை அளிக்கிறேன். நிச்சயமாக நடவடிக்கை எடுத்து, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்தப் பேரவைக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னாலே, உங்களுக்குத் தகவல் சொல்ல வேண்டுமென்று அரசுக்கு நான் கருத்துச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). திரு. இரா. பெர்னார்டு.

திரு. இரா. பெர்னார்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குமரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டம். பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள் படித்து, பட்டம் பெற்று, தொழில் பயிற்சி பெற்று, வேலையின்றி அவதிப்படுகிறார்கள் என்பதை அரசும் அறியும். இந்த அவல நிலையைப் போக்க குமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி, முட்டத்திற்கும், அம்மாண்டிவிளைக்கும் இடைப்பட்ட பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க எல்லாவித வாய்ப்பும், வசதியும் இருக்கின்ற

காரணத்தால் அங்கே விரைவில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா, எவ்வளவு காலத்தில் அது தொடங்கப்படும், எவ்வளவு முதலீட்டில் பணி நடைபெறும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகஸ்தீஸ்வரம் தாலுகா, நீண்டகரை, தீக்கிராமத்தில் சுமார் 13.63 ஏக்கர் பட்டா நிலமும், கல்குளம் தாலுகா கடியப்பட்டினம் கிராமத்தில் சுமார் 11.17 ஏக்கர் பட்டா நிலமும், மொத்தம் 24.80 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நில எடுப்புச் சட்டத்தின்கீழ், அரசின் நிருவாக ஒப்புதலுக்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுவிட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்தால் ஒரு மாத காலத்திற்குள்ளாகவே நம்முடைய சிட்கோ மூலமாக அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

39—

கால்நடை மருத்துவமனை

***27723—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்மலை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்மலை கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று அமைச்சருடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ளது. தென்மலையிலிருந்து கிழக்கே 15 கிலோமீட்டருக்கு அப்பாலும், மேல் பகுதியில் 15 கிலோமீட்டருக்கு மேற்கே உள்ள